கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண்  48/2013

பிரதிவாதி தரப்பு சாட்சி – 2  முருகேசன்  திரு.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 28.01.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்தது என்றால் 1ம் பிரதிவாதி வன்னிமுத்து அழைத்து வந்தார். இவ்வழக்கு யார் யார் மீது எந்த வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரங்கள் தெரியுமா என்றால் பிச்சையம்மாள் வன்னிமுத்து மீது தாக்கல் செய்திருந்தார். மேற்படி விவரம் 30 வருடங்களுக்கு முன்பு தெரியும். மேற்படி இரு நபர்களை தவிர வேறு யாரும் இவ்வழக்கில் தரப்பினர்கள் இல்லையா என்றால் இல்லை. எனக்கு நிலங்கள் உள்ளன. எனது நிலத்தின் சர்வே எண் மற்றும் எனது பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது.

2. என்னென்ன சர்வே எண்களுக்கு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. காணிக்கும், வீட்டிற்கும் வழக்கு நடந்து வருகிறது. வாதி என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஊர் வழக்கப்படி ஊர் கூட்டம் கூட்டி பிரச்சனைக்கு தீர்வு காண்பது வழக்கும் என்றால் முன்பு இருந்தது. தற்போது அவ்வாறு இல்லை. காணி யாருடைய நிலம் என்றால் செட்டி பண்னை நிலமாகும். மேற்படி காணியை ஆதீயில் யார் குத்தகைக்கு ஓட்டியது என்றால் வன்னிமுத்துயின் தந்தை காத்தான் குத்தகைக்கு அனுபவம் செய்து வந்தார். மேற்படி வீடும் காத்தான் தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான்.

3. காத்தான் எப்போது இறந்தார் என்றால் அது பற்றி தெரியாது. அவர் இறந்த போது நான் சிறுவனாக இருந்தேன். காத்தானின் மனைவி பெயர் தெரியுமா என்றால் தெய்வாணை ஆகும். காத்தானுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 குழந்தைகள். அவர்கள் முறையே மாரியப்பன்,

வன்னிமுத்து மற்றும் அய்யனார் ஆவார்கள். காத்தானுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் வாரிசுகளின் அடிப்படையில் மேற்படி மூன்று நபர்களுக்கு உரிமை உள்ளதா என்றால் உள்ளது. மாரியப்பனின் மனைவி வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்டார்.

4. அதன்பின்னிட்டு மாரியப்பன் இறந்துவிட்டார். அப்போது நான் சிறுவனாக இருந்தேன். எனக்கு மாரியப்பன் இறந்த போது என்ன வயதிருக்கும் என்றால் சுமார் 18 வயது இருக்கும். மாரியப்பனுக்கு குழந்தை இருந்ததா என்றால் ஒரு மகன் இருந்தார். அவர் பெயர் இரவி. மேற்படி இரவியின் மனைவி பெயர் என்ன என்றால் தெரியாது. இரவிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் தெரியாது. மாரியப்பனின் சொத்துக்களில் அவரது மகனான இரவிக்கு உரிமை உள்ளது என்றால் அதை நான் சொல்ல முடியாது. இரவி சிறு வயதிலேயே அவருடைய தாயாருடன் சென்று விட்டதால் காத்தானின் சொத்துக்களில் அவருக்கு பங்கு இல்லை என்றால் அதை என்னால் கூற முடியாது.

5. மேல் நங்கவரத்தில் ராஜப்பன் உள்ளார் என்றால் சரிதான். இருளன் மகன் தாண்டவன் உள்ளார் என்றால் சரிதான். தாண்டவன் தற்போது உயிருடன் இல்லை. பிச்சைக்காரன் மகன் மாணிக்கம் உள்ளார் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் ஊர் மூப்பனா என்றால் இருந்திருக்கலாம். மேற்படி நபர்கள் பஞ்சாயத்து செய்து மாரியப்பனின் மகன் இரவி, வன்னிமுத்து ஆகியோர்கள் காணி மற்றும் வீடு நிலங்களை பொறுத்து பாகம் பிரித்து எழுதி கொண்டார்களா என்றால் அது பற்றி தெரியாது. 10.08.1996 ல் மேற்படி இரவி, அய்யனார், வன்னிமுத்து ஆகியோர்கள் சம பாகங்களாக பிரித்து கொண்டனர் என்றால் அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு பிறகு இரவி இறந்துவிட்டார் என்றால் அது பற்றி தெரியாது.

6. வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு பிறகு வாதிகள் குத்தகை செலுத்தி முறையாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அய்யனார் வன்னிமுத்துவின் அண்ணன் ஆவார். அய்யனார் மற்றும் வாதி குடும்பத்திறகும், என் குடும்பத்திற்கும் பகை உள்ளதா என்றால் இல்லை. இரவிக்குபிரிந்த சொத்துக்களை அவரது தாயார், மனைவி ஆகியோர்

குத்தகை செலுத்தி அனுபவத்து வருகிறார்கள் என்றும், வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai**